



# தமிழ் மக்கள் குரல்

தினசரி காலை நாளிதழ்

tamilmakkalkurall@gmail.com

RNI No. : TNTAM24840

உள்ளது உள்ளபடி







## மதுரை அரசு மருத்துவமனையில் தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம் முதல்வர் விஜய் தொடங்கி வைத்தார்

சென்னை, 29 செப்டம்பர் 2026: மதுரை அரசு மருத்துவமனையில் தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தை முதல்வர் விஜய் இன்று தொடங்கி வைத்தார். தமிழக வெற்றிக் கழக தலைவர் முதல்வர் விஜய், சட்டமன்ற தேர்தல் பிரசாரத்தின்போது அரசு மருத்துவமனையில் பிறக்கும் குழந்தைகளுக்கு தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம் மூலம் ஒரு கிராம் தங்க மோதிரம் வழங்கப்படும் என அறிவித்தார். இதன்படி, தமிழக அரசின் தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தை, முதல்வர் விஜய் இன்று மதியம் 12 மணியளவில் மதுரை அரசு மைய மருத்துவமனையில் தொடங்கி வைத்தார். இதற்காக தனி விமானம் மூலம் இன்று காலை 9.30 மணிக்கு சென்னையில் இருந்து புறப்பட்ட முதல்வர் விஜய், 11 மணியளவில் மதுரை வந்தார். விமான நிலையத்தில் அவருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.



பின்னர் கார் மூலம் ரிங்ரோடு சிவகங்கை சாலை வழியாக மதுரை அரசு மருத்துவமனைக்கு புறப்பட்டு வந்தார். விமான நிலையம் அருகே மண்டேலா நகர் முதல் ஜி.ஹெச் வரை சுமார் 15 கிமீ தூரம் ரோடு ஷோ நடத்தினார். இதை தொடர்ந்து மதுரை அண்ணா பஸ்நிலையம் அருகே பனகல் ரோட்டில் உள்ள மதுரை அரசு மைய மருத்துவமனைக்கு பகல் 12 மணியளவில் வந்தடைந்தார். தொடர்ந்து அரசு மருத்துவமனையின் புற்றுநோய் பிரிவுக்கு எதிரே உள்ள ஆடிட்டோரியத்தில் நடந்த நிகழ்ச்சியில் முதல்வர் விஜய் கலந்து கொண்டு, தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தை தொடங்கி வைத்தார். அங்கு 27 குழந்தைகளுக்கு தங்க மோதிரத்தை வழங்கினார். பின்னர் அங்கிருந்து அருகில் சீமாங் மகளிர் பிரசவ கட்டிடத்தின் கீழே நேற்று தொடங்கி இன்று காலை வரை பிரசவமான குழந்தைகளில் 10 பேருக்கு தங்க மோதிரங்களை வழங்கினார். இவ்வாறு மொத்தம் 37 குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்கினார்.

நிகழ்ச்சி முடிந்து மதுரை அரசு மருத்துவமனையிலிருந்து புறப்பட்ட முதல்வர் விஜய், ரூ.10.25 கோடியில் சீரமைக்கப்பட்ட காந்தி மியூசியத்திற்கு சென்றார். அங்கு காந்தி சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார். பிறகு, காந்தி மியூசியத்தை திறந்து வைத்து பார்வையிட்டார். இதைத் தொடர்ந்து அழகர் கோவில் ரோட்டிலுள்ள அரசு விருந்தினர் மாளிகையில் ஓய்வெடுத்தார்.

தொடர்ந்து மாலை 5 மணியளவில் மீனாட்சியம்மன் கோயிலுக்கு சென்று சாமி தரிசனம் செய்துவிட்டு அதன்பின் மாலை 6.30 மணியளவில் தனி விமானம் மூலம் சென்னை திரும்பினார்.

## விரைவில் ஈரான் சரணடையும்; போர் முடியும், கச்சா எண்ணெய் விலை குறையும் - அமெரிக்க அதிபர் டிரம்ப்

சென்னை 29, செப்டம்பர் 2026: ஈரானுக்கு எதிரான ராணுவ மற்றும் பொருளாதார மோதலில் அமெரிக்கா வெற்றி பெறும் என்றும், இதன் மூலம் உலகளாவிய கச்சா எண்ணெய் விலையை குறைய கூடிய வாய்ப்பு கிடைக்கும் என்றும் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் கூறி உள்ளார்.

விரைவில் ஈரான் சரணடையும், அந்நாடு சரணடைந்த உடன் கச்சா எண்ணெய் விலை கடுமையாக வீழ்ச்சியடையும் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக பேசியுள்ள அவர், ஈரான் சரணடைந்தவுடன் போர் விரைவில் முடிவுக்கு வரும்.

இதனால் கச்சா எண்ணெய் விலை அதலபாதாளத்திற்கு சரிய போகிறது என்று கூறி உள்ளார். தனது நிர்வாகத்தின் கீழ் அமெரிக்காவில் விலைவாசி குறைந்துள்ளது; மேலும் எரிபொருள் செலவுகள் குறைந்துள்ளன. அமெரிக்க நாட்டின் வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு வறுமை குறைவாக உள்ளது என்றார்.

போர்ச் சூழலுக்கு மத்தியிலும், கடந்த வார இறுதியில் ஹோர்முஸ் நீரிணைப் பகுதியிலிருந்து சாதனை அளவிலான கச்சா எண்ணெயை நாங்கள் வெளியே கொண்டு வந்தோம்; இது போருக்கு முந்தைய அளவை விட அதிகம் என்றும் அவர் மேலும் கூறினார். நவம்பர் மாதம் அமெரிக்காவில் நடைபெறவுள்ள இடைக்காலத் தேர்தலுக்கு முன்னதாக ஈரான் மீது கூடுதல் ராணுவத் தாக்குதல்கள் நடத்தப்படுவதற்கான வாய்ப்பு இன்னும் இருக்கிறது என்று சூசகமாக அமெரிக்க அதிபர் தெரிவித்தார்.

ஈரான் பிரச்சனை தீர்ந்தவுடன், பெட்ரோல்-டீசல் விலைகள் மட்டுமல்லாமல் மளிகைப் பொருட்களின் விலைகளும் கணிசமாகக் குறையும் என்று டிரம்ப் கூறினார். ஹோர்முஸ் நீரிணையை முழுமையாகத் திறப்பதற்காக ஈரான் முன் வைத்த அமைதி ஒப்பந்தத்தை அமெரிக்கா நிராகரித்துள்ளதை டிரம்ப் உறுதிப்படுத்தினார்.

அந்த ஒப்பந்தம் அமெரிக்காவின் நிபந்தனைகளுக்கு உட்படவில்லை என்றும், அதே நேரம் மறைமுகப் பேச்சுவார்த்தைகள் தொடரும் என்றும் அவர் கூறினார்.




## ‘தாய் மாமன் தங்க மோதிரம் திட்டம்’; 89,955 தங்க மோதிரங்களை தயாரித்தது ஜோய்ஆலுக்காஸ்: அரசு மருத்துவமனைகளுக்கு அனுப்பும் பணி தீவிரம்

சென்னை, 29 செப்டம்பர் 2026: தமிழ்நாடு அரசின் தாய் மாமன் தங்க மோதிர திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட முதற்கட்ட 89,955 ஒரு கிராம் (22 கேரட்) தங்க மோதிரங்களை ஜோய்ஆலுக்காஸ் குரூப் வெற்றிகரமாக தயாரித்து முடித்துள்ளது. தமிழ்நாடு அரசின் தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தின் கீழ், மாநிலம் முழுவதும் உள்ள அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் தகுதியுடைய ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு கிராம் தங்க மோதிரம் பரிசாக வழங்கப்பட உள்ளது. இதன் மூலம் தமிழ்நாடு முழுவதும் சுமார் 4.41 லட்சம் புதிதாக பிறந்த குழந்தைகள் பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கான குறைந்த விலைப்புள்ளி கோருநர் தங்கம் விலையை தவிர்த்து, மோதிரங்கள் செய்கூலி, பிஐஎஸ் ஹால்மார்க் முத்திரை, காப்பீடு, போக்குவரத்து மற்றும் பேக்கிங் ஆகிய அனைத்திற்கும் சேர்த்து வெறும் 'ஒரு பைசாவை' மட்டுமே கட்டணமாக குறிப்பிட்டு ஜோய் ஆலுக்காஸ் நிறுவனம் மிக குறைந்த விலையைக் கோரிய எல்1 நிறுவனமாக தேர்வு செய்யப்பட்டது. தற்போது தயாரிக்கப்பட்டுள்ள முதற்கட்ட 89, 955 தங்க மோதிரங்கள், முதன்மையாக அதிக பிரசவங்கள் நடைபெறும் 107 குறிப்பிட்ட அரசு தாய்சேய் நல மையங்களுக்கு வழங்கப்பட உள்ளன.

இந்த மோதிரங்கள் அனைத்தும் அரசு பரிந்துரைத்த ஒரு கிராம் எடை மற்றும் 22 கேரட் தூய்மை தரத்தின்படி துல்லியமாக தயாரிக்கப்பட்டுள்ளன. மேலும், நம்பகத்தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்யும் வகையில், ஒவ்வொரு மோதிரத்திலும் பிஐஎஸ் ஹால்மார்க் முத்திரையும், 6 இலக்க ஹெச்யுஐடி எண்ணும் முத்திரைகள் செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்காக பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட பாதுகாப்பான பேக்கிங்கில் இந்த மோதிரங்கள் அடைக்கப்பட்டு, அந்தந்த அரசு மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்லப்படுகின்றன.



முதற்கட்ட மோதிரங்களை பேக்கிங் செய்து அனுப்பும் பணிகள் சென்னை மற்றும் கோயம்புத்தூரில் உள்ள ஜோய் ஆலுக்காஸின் பிரத்யேக மையங்களில் தற்போது விறுவிறுப்பாக நடந்து வருகின்றன.

இதுகுறித்து ஜோய் ஆலுக்காஸ் குரூப் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் டாக்டர் ஜோய் ஆலுக்காஸ் கூறுகையில்: “தமிழ்நாடு முதல்வர் ஜோசப் விஜய்க்கும், தமிழக அரசுக்கும் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இத்தகைய உன்னதமான 'தாய் மாமன் தங்க மோதிரம் திட்டத்தில்' ஜோய்ஆலுக்காஸ் இணைந்திருப்பதை பெருமையாக கருதுகிறோம். ஒரு குழந்தையின் பிறப்பு என்பது ஒவ்வொரு குடும்பத்திற்கும் மிகவும் மகிழ்ச்சியான தருணம். நமது பாரம்பரியத்தில் தங்கம் என்பது எப்போதும் ஆசீர்வாதம் மற்றும் மங்களகரமான தொடக்கத்தின் அடையாளமாக இருந்து வருகிறது.

தமிழக மக்கள் பல ஆண்டுகளாக எங்கள் மீது அளவற்ற அன்பையும் ஆதரவையும் பொழிந்துள்ளனர். இந்த உன்னதமான திட்டத்தின் மூலம் தமிழக மக்களுக்கு மீண்டும் சேவை செய்ய எங்களுக்கு ஒரு நல் வாய்ப்பு கிடைத்துள்ளது” என்றார். தமிழகம் முழுவதும் 30க்கும் மேற்பட்ட பிரமாண்ட ஷோரூம்களுடன் வலுவான அடித்தளத்தை கொண்டுள்ள ஜோய்ஆலுக்காஸ் நிறுவனம், தமிழக குடும்பங்களால் அன்போடு “ராசியான கடை” என்று அழைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

## இந்தியா - ஸ்வீடன் இடையிலான பொருளாதாரப் பரிமாற்றத்தை 2030-க்குள் இரட்டிப்பாக்க இலக்கு; ஸ்வீடன் தூதர் தகவல்

சென்னை 29, செப்டம்பர் 2026: வரும் 2030-ஆம் ஆண்டிற்குள் இந்தியா - ஸ்வீடன் ஆகிய இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதாரப் பரிமாற்றத்தை இரு மடங்காக உயர்த்த வேண்டும் என தெளிவான இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக இந்தியாவிற்கான ஸ்வீடன் தூதர் பெட்ரா மெனண்டர் கூறியுள்ளார். இரு நாடுகளுக்கிடையே அரசியல் ரீதியான உரையாடல்களும் ஒத்துழைப்பும் வளர்வதோடு, மக்களிடையேயான பரிமாற்றங்களும் அதிகரிக்க வேண்டும். நம்மிடையே உள்ள ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கக் கூட்டாண்மை ஒரு சிறந்த அடித்தளமாக அமைந்து, நம்மை சிறந்த எதிர்காலத்தை நோக்கி அழைத்துச் செல்லும் என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்தியா- ஸ்வீடன் இடையிலான வர்த்தக ஒப்பந்தம் குறித்து பேசிய பெட்ரா மெனண்டர், சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட வர்த்தக ஒப்பந்தம் நடைமுறைகளை எளிமையாக்கும். குறிப்பாக எளிமையான நடைமுறைகள் மற்றும் குறைவான சுங்க வரிகள் ஆகியவை பொருளாதாரத் துறையில் இரு நாடுகளிடையே கூடுதல் ஒத்துழைப்பை வளர்க்க உதவும்.

மேலும் செயற்கை நுண்ணறிவு (ஏஐ), இணைப்பு வசதி, சுரங்கத் தொழில், சுகாதாரம், உயிர் அறிவியல் உள்ளிட்ட துறைகளில் உறுதியான வாய்ப்புகளை உருவாக்க வேண்டியது அவசியம் என்று குறிப்பிட்டார். சில மாதங்களில் நடைபெற உள்ள இந்தியா-ஸ்வீடன் வர்த்தகம் மற்றும் முதலீட்டு உச்சிமாநாடு 2027 குறித்து பேசிய மெனண்டர், இதற்கான திட்டமிடல் பணிகள் இன்னும் நடைபெற்று வருகின்றன; ஏற்கனவே செயல்பட்டு வரும் நிறுவனங்கள் அல்லது கூட்டு முயற்சிகள் வளர்ச்சியடைவது அவசியமான அதே வேளையில், புதிய நிறுவனங்களின் வருகையும் தேவைப்படுகிறது;

அத்தகைய நிறுவனங்கள் ஏற்கனவே இந்தியாவின் பக்கம் பார்வையை திருப்ப தொடங்கியுள்ளன என்று குறிப்பிட்டார்.

## ‘தி கைதான் பள்ளி‘ உடனான கூட்டாண்மை மூலம் தனது செயல்பாடுகளை விரிவாக்கம் செய்யும் லைட்ஹவுஸ் லேர்னிங்!

சென்னை 29, செப்டம்பர் 2026: இந்தியாவின் முன்னணி ஆரம்பகால குழந்தைகள் மற்றும் பள்ளிப் (கே-12) கல்வி நிறுவனமான லைட்ஹவுஸ் லேர்னிங் (முன்பு யூரோகிட்ஸ் இன்டர்நேஷனல்), நோய்டாவில் உள்ள 'தி கைதான் பள்ளி'யுடன் இணைந்து உத்திசார் கூட்டாண்மை (strategic partnership) மேற்கொள்வதாக இன்று அறிவித்துள்ளது. இக்கூட்டாண்மையானது, தி கைதான் பள்ளியின் புகழ்பெற்ற பாரம்பரியத்தையும், லைட் ஹவுஸ் லேர்னிங் அமைப்பின் விரிவான கட்டமைப்பு, நிபுணத் துவம் மற்றும் கல்வித் திறன்களையும் ஒன்றிணைக்கிறது. இது பள்ளியின் அடுத்த கட்ட வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பதுடன், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான கற்றல் வாய்ப்புகளையும் வலுப்படுத்தும்.

1995-ஆம் ஆண்டு கைதான் குடும்பத்தினரால் தொடங்கப்பட்ட தி கைதான் பள்ளி, கல்விச் சிறப்பு மற்றும் நற்பண்புகளை அடிப்படையாகக் கொண்ட முழுமையான மதிப்பீட்டுக் கல்வியை வழங்கும் தொலைநோக்குப் பார்வையுடன் நிறுவப்பட்டது. பல ஆண்டுகளாக, இப்பள்ளி தன் சிறந்த கல்வி முடிவுகள், கலை மற்றும் கூடுதல் பாடத்திட்டங்களின் விரிவான வாய்ப்புகள் மற்றும் நற்பண்புகள் சார்ந்த பண்பாட்டிற்காகப் வலுவான நற்பெயரைப் பெற்றுள்ளது. இதன் வளாகத்தில் நவீன அறிவியல் மற்றும் கணினி ஆய்வகங்கள், நூலகங்கள், டிஜிட்டல் வகுப்பறைகள், மற்றும் அதிநவீன விளையாட்டு மற்றும் கலைக் உள்கட்டமைப்புகள் அமைந்துள்ளன. இந்தப் கூட்டாண்மை மூலம், 'தி கைதான் பள்ளி' லைட்ஹவுஸ் லேர்னிங் நிறுவனத்தின் ஒருங்கிணைந்த தொழில்நுட்ப வசதிகள் மற்றும் அதன் கல்விக் குழுமத்தின் சிறந்த நடைமுறைகளைப் பயன்படுத்திக் கொள்ளும். தணிக்கைகள் மற்றும் சான்றிதழ்களால் பலப்படுத்தப்பட்ட பிரத்யேக 'ஆரோக்கியம் & பாதுகாப்பு' கட்டமைப்பு; கற்பித்தல் முறை, பாடத்திட்ட வடிவமைப்பு, மதிப்பீடு மற்றும் ஆசிரியர் திறன் மேம்பாடு ஆகியவற்றிற்குத் துணையாகச் செயல்படும் சிறப்புப் பெற்ற மத்திய கல்விக் குழு; குழந்தைகள் தங்களைச் சமூக ரீதியாகவும், உணர்வுரீதியாகவும், மனரீதியாகவும் மேம்படுத்திக் கொள்ள உதவும் 'மைய நலவாழ்வு மையம்' (Centre of Well-Being); பாதுகாப்பான, குழந்தைகள் மையப் படுத்தப்பட்ட தொழில்நுட்ப தீர்வுகளை உருவாக்கித் தரும் லைட்ஹவுஸ் லேர்னிங் நிறுவனத்தின் சொந்த தொழில்நுட்பக் குழுவான 'லைட்ஹவுஸ் டிஜிட்டல் லேப்ஸ்' ஆகியவை இதில் அடங்கும்.

மேலும், இக்கூட்டாண்மையானது பள்ளி தலைமைத்துவ மேம்பாட்டில் கவனம் செலுத்துவதுடன், லைட்ஹவுஸ் லேர்னிங் அமைப்பின் பரந்த தேசிய அளவிலான வலைப்பின்னல் மூலம் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பயனடைவதற்கான வாய்ப்புகளையும் உருவாக்கும். கருத்துப் பரிமாற்றங்கள், ஆராய்ச்சிகள், தொழில்முறை மேம்பாட்டுப் பயிற்சிகள் மற்றும் பகிரப்பட்ட கற்பித்தல் நடைமுறைகள் ஆகியவற்றின் மூலம், இரு அமைப்புகளும் தி கைதான் பள்ளியின் நிறுவன லட்சியங்களைத் தக்க வைத்துக்கொண்டு, வரும் ஆண்டுகளில் கல்வி அனுபவங்களையும் அதன் முடிவுகளையும் மேலும் வலுப்படுத்தும்.

## ஆற்றல் புத்தாக்கம் மற்றும் சிக்கல் தீர்க்கும் திறனை ஆதரிப்பதற்காக, செவ்ரான் என்ஜின் மற்றும் ஐஐடி மெட்ராஸ் இணைந்து ஆற்றல் தொழில்நுட்ப அடைகாப்புத் திட்டத்தைத் (எனர்ஜி டெக்னாலஜி இன்குபேஷன் புரோகிராம்) தொடங்கியுள்ளன



பெங்களூரு 29, செப்டம்பர் 2026: செவ்ரான் இன்ஜீனியரிங் அண்டு இன்னோவேஷன் எக்செலன்ஸ் சென்டர் (என்ஜின்) மற்றும் இந்திய தொழில்நுட்ப நிறுவனம் மெட்ராஸ் (ஐஐடி-மெட்ராஸ்) இணைந்து, செவ்ரான் - ஐஐடிஎம் ஆற்றல் தொழில்நுட்ப அடைகாப்புத் திட்டத்தைத் தொடங்கியுள்ளன.

இந்தத் திட்டம், ஆற்றல் தொழில்நுட்பங்கள், உள்கட்டமைப்பு, கார்பன் பயன்பாடு, வட்டப் பொருளாதாரம் மற்றும் வளத் திறன் போன்ற துறைகளில் பணியாற்றும் தொடக்க நிலை கண்டுபிடிப்பாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் சமூக தொழில்முனைவோருக்கு ஆதரவளிக்கும். பங்கேற்பாளர்கள், ஐஐடி மெட்ராஸின் ஆராய்ச்சி மற்றும் அடைகாப்பு சூழலமைப்பின் மூலம், அடைகாப்பிற்கு முந்தைய ஆதரவு, தொழில்நுட்ப வழிகாட்டுதல், முன்மாதிரி நிதியுதவி மற்றும் தொழில்முனைவோர் வழிகாட்டுதலைப் பெறுவார்கள்.

செவ்ரான் இந்தியா தலைவர் (கன்ட்ரி ஹெட், செவ்ரான் இந்தியா) டாக்டர் அக்ஷய் சாஹ்னி கூறியதாவது:

இந்த புதிய முன்னெடுப்பு, வாய்ப்புகள் சிறகடித்துப் பறக்க உதவும் நோக்கத்துடன் அமைக்கப்பட்ட, எங்களின் சமூகக் கூட்டாண்மைத் திட்டமான செவ்ரான் உடானின் ஒரு முக்கியப் பகுதியாகும்.

செவ்ரான் என்ஜின், தற்போதைய மற்றும் எதிர்கால ஆற்றல் சவால்களை எதிர்கொள்ள உதவும் வகையில், இந்தியாவின் ஆழ்ந்த பொறியியல் மற்றும் தொழில்நுட்பத் திறமையை செவ்ரானின் உலகளாவிய வளங்கள் மற்றும் நிபுணத்துவத்துடன் சூன்றிணைக்கிறது. ஐஐடி மெட்ராஸுடனான இந்தக் கூட்டாண்மை மூலம், ஆற்றல் துறைக்கான நடைமுறைத் தீர்வுகளை உருவாக்கும் மாணவர் குழுக்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் சமூக தொழில்முனைவோருக்கு ஆதரவளித்து, அந்த எண்ணத்தை இந்தியாவின் புத்தாக்கச் சூழலமைப்பிற்குள் நாங்கள் விரிவுபடுத்துகிறோம்.

தொழில்நுட்ப வழிகாட்டுதல், தொழில்முனைவோர் ஆதரவு மற்றும் நடைமுறைத் தொழில் கண்ணோட்டம் ஆகியவற்றை ஒன்றிணைப்பதன் மூலம், எதிர்காலத்திற்குத் தயாரான திறமையாளர்களை உருவாக்கவும், மலிவான, நம்பகமான மற்றும் மேலும் தூய்மையான ஆற்றலுக்குப் பங்களிக்கக்கூடிய யோசனைகளை முன்னெடுத்துச் செல்லவும் உதவுவோம் என நம்புகிறோம்.

செவ்ரான் என்ஜின் உடனான கூட்டாண்மையின் முக்கியத்துவம் குறித்துப் பேசிய ஐஐடி மெட்ராஸின் முன்னாள் மாணவர்கள் மற்றும் பெருநிறுவன உறவுகளுக்கான டீன் (டீன் அலுமினி அன்ட் கார்ப்பரேட் ரிலேஷன்) பேராசிரியர் அஷ்வின் மகாலிங்கம் அவர்கள்:

செவ்ரான் - ஐஐடிஎம் ஆற்றல் தொழில்நுட்ப அடைகாப்புத் திட்டத்தின் மூலம், புதுமைப் படைப்பாளர்களுக்கு வழிகாட்டுதல், தொழில்நுட்ப நிபுணத்துவம் மற்றும் ஒரு வலுவான புத்தாக்கச் சூழலமைப்பை கூட்டாக வழங்கி, நம்பிக்கைக்குரிய யோசனைகளை நடைமுறைத் தீர்வுகளாக மாற்ற உதவுவோம் என நம்புகிறோம். நிஜ உலக ஆற்றல் சவால்களை எதிர்கொள்ள தொழில்நுட்பத்தையும் புத்தாக்கத்தையும் பயன்படுத்த வேண்டும் என்ற எங்களது தொலைநோக்குப் பார்வையை முன்னெடுத்துச் செல்வதில், இது போன்ற கூட்டாண்மைகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

## பார்கின்சன் நோய் முதல் சாலை பள்ளங்கள் வரை அன்றாடப் பிரச்சனைகளுக்கு தீர்வளிக்கும் 9 தமிழக மாணவர்கள்




சென்னை 29, செப்டம்பர் 2026: மூன்று நிமிட வாட்ஸ் அப் வீடியோ, தொழிலாளர்களின் வேலையைக் கெடுக்காமல் அவர்களுக்குப் புதிய விஷயங்களைக் கற்றுத்தருமா? ஸ்மார்ட்போன் மூலமாக, வழியில் உள்ள பள்ளங்கள் மற்றும் நீர் தேங்கியுள்ள சாலைகள் பற்றி முன்கூட்டியே பயணிகளுக்கு எச்சரிக்க முடியுமா? செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்துடன் கூடிய கையில் அணியும் கருவி, பார்கின்சன் நோய் உள்ளவர்களை சுறுசுறுப்பாகவும் தன்னிச்சையாகவும் செயல்பட உதவுமா?

இந்தச் சாத்தியங்களை நனவாக்க, தமிழ்நாட்டைச் சேர்ந்த ‘4 பர்சன்டேஜ்’, ‘ஜார்விஸ்’ மற்றும் ‘ரோக்’ ஆகிய மூன்று அணிகள் முயற்சி செய்து வருகின்றன. இவர்களின் சிறப்பான யோசனைகள், சாம்சங் சால்வ் பார் டுமாரோ 2026 போட்டியின் டாப் 20 இடங்களுக்கு அவர்களைக் கொண்டு சென்றுள்ளன.

மைக்ரோலேர்னிங் ஏஐ, ஷேஃப்பாத் ஏஐ மற்றும் நியூரோஸ்ட்ரைட் ஆகிய திட்டங்கள் மூலமாக, சென்னை மற்றும் கோயம்புத்தூரைச் சேர்ந்த 9 இளம் கண்டுபிடிப்பாளர்கள் செயற்கை நுண்ணறிவு, சென்சார்கள் மற்றும் அணியக்கூடிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, பணியிடக் கற்றல், சாலைப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் சார்ந்த அன்றாடப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்கின்றனர்.

மூன்று நிமிடங்களில் கற்றல் - கோயம்புத்தூரைச் சேர்ந்த ‘4 பர்சன்டேஜ்’ அணியின் சஜித் ஜே, மித்ரன் பி மற்றும் கவின் நந்தா எம் கே ஆகியோருக்கு ஒரு பிரச்சனை தெளிவாகப் புரிந்தது: தொழிற்சாலைகளில் மற்றும் பொது இடங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு, வழக்கமான பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்ள நேரம் கிடைப்பதில்லை.

இதற்குத் தீர்வாக, இவர்கள் ‘மைக்ரோலேர்னிங் ஏஐ’ என்ற தளத்தை உருவாக்கியுள்ளனர். இது கடினமான தகவல்களை எளிதாகப் புரிந்துகொள்ளக் கூடிய இரண்டு முதல் மூன்று நிமிட வீடியோக்களாக மாற்றுகிறது.

இந்த வீடியோக்களைத் தொழிலாளர்களின் தாய்மொழியிலேயே வாட்ஸ்அப் வழியாக அனுப்ப முடியும். வேலையை விட்டு அதிக நேரம் ஒதுக்கிப் படிக்காமல், எளிதாகக் கற்றுக்கொள்வதற்காக இந்தத் தளம் வடிவமைக்கப்பட்டுள்ளது. வாட்ஸ்அப் மற்றும் பிராந்திய மொழிகளின் வசதியுடன் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தையும் இணைப்பதன் மூலம், அனைத்துத் துறைகளிலும் உள்ள தொழிலாளர்களுக்கு இந்தப் பயிற்சியை மிகவும் பயனுள்ளதாக மாற்ற முடியும் என்று இந்த அணி நம்புகிறது.

## ஹூமாயூன் மருத்துவமனையில் வயிற்றில் கீறலோ செயற்கை ஆசனவாய் உருவாக்கமோ இல்லாமல் வெற்றிகரமாக நடைபெற்ற நவீன மலக்குடல் அறுவைசிகிச்சை

சென்னை 29, செப்டம்பர் 2026: சென்னை மாநகரில் பிரபலமான டாக்டர் ஹூமாயூன் சிறப்பு மருத்துவமனையில், ரமேஷ் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) என்ற 77 வயது முதியவருக்கு, வயிற்றில் கீறலிடப்படும் அறுவைசிகிச்சை மற்றும் செயற்கை ஆசனவாய் (ஸ்டோமா) தேவைப்படாதவாறு, மிகச்சிறிய அளவிலான துளை மூலம் பெரிய மலக்குடல் கட்டி வெற்றிகரமாக அகற்றப்பட்டது.

ஆசனவாய் வழியாகச் செய்யப்படும் குறைந்தபட்ச ஊடுருவல் அறுவைசிகிச்சை (டிஏஎம்ஐஎஸ்) எனப்படும் அதிநவீன மருத்துவத் தொழில்நுட்ப உத்தியின் மூலம், இயற்கையான ஆசனவாய் வழியாகவே இந்த 5 செ.மீ அளவிலான கட்டி மலக்குடலிலிருந்து அகற்றப்பட்டது. இதனால் இந்த முதிய நோயாளிக்கு வயிற்றில் கீறலிட்டு செய்யப்பட வேண்டிய பெரிய அறுவை சிகிச்சை தவிர்க்கப்பட்டது. ஒரு மணி நேரம் நடந்த சிகிச்சைக்குப் பிறகு, நோயாளி ஆறு மணி நேரத்திலேயே வழக்கம்போல உணவருந்த தொடங்கினார்; அன்றே அறைக்குள் நடமாடவும் முடிந்தது. மறுநாள் காலையிலேயே மருத்துவமனையில் இருந்து தனது வீட்டிற்கு முதியவர் நலமுடன் அனுப்பி வைக்கப்பட்டார்.

ஆசனவாயிலிருந்து இரத்தப்போக்கு மற்றும் மலம் கழிக்கும் செயல்பாட்டில் ஏற்பட்ட மாற்றங்கள் தொடர்பாக ஆலோசனை பெறவே இந்நோயாளி மருத்துவமனைக்கு வந்தார். அதைத் தொடர்ந்து செய்யப்பட்ட பரிசோதனையில், ஆசனவாயிலிருந்து சுமார் 7 செ.மீ தொலைவில், மலக்குடலின் மையப் பகுதியில் 5 செ.மீ அளவிலான அகலமான கட்டி அவருக்கு இருப்பது உறுதியாக கண்டறியப்பட்டது. அதன் அளவு மற்றும் அமைந்துள்ள இடத்தின் காரணமாக, வழக்கமான கொலோனோஸ்கோபி மூலம் அதனை அகற்றுவது பொருத்தமானதாக இருக்காது என மருத்துவ நிபுணர்கள் தீர்மானித்தனர்.

முதியவர்களுக்கு வழக்கமான முறையில் பெரிய அறுவை சிகிச்சை செய்யும் போது, அது உடல் ரீதியாக பெரும் சோர்வையும், மனஅழுத்தத்தையும் ஏற்படுத்துவதுடன், குணமடைய நீண்ட காலம் ஆகும். சில சமயங்களில் தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக ஒரு செயற்கை ஆசனவாய் அமைக்க வேண்டிய தேவையும் ஏற்படலாம். கட்டியின் தன்மை மற்றும் அது அமைந்திருந்த இடத்தை கருத்தில் கொண்டு, வயிற்றில் எந்த வெட்டுக்காயமும் இன்றி மலக்குடல் கட்டியை அகற்றும் அதிநவீன மருத்துவ அணுகுமுறையை பயன் படுத்துவது என அறுவைசிகிச்சைக் குழுவினர் முடிவு செய்தனர்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

## டெலிவரி பார்ட்னர்களுக்கான பேட்டரி ஸ்வாப்பிங் உள்கட்டமைப்பை வலுப்படுத்தும் இன்ஸ்டாமார்ட்; யூலு மற்றும் யூமா எனர்ஜி உடன் கூட்டணி

சென்னை 29, செப்டம்பர் 2026: இந்தியாவின் முன்னணி க்விக் காமர்ஸ் தளமான இன்ஸ்டாமார்ட், பேட்டரி ஸ்வாப்பிங் உள்கட்டமைப்பை மேலும் வலுப்படுத்தும் திட்டத்தை இன்று அறிவித்துள்ளது. பேட்டரி ஸ்வாப்பிங் வசதியை டெலிவரி பார்ட்னர் களுக்கு மேலும் நெருக்கமாகக் கொண்டு வருவதுடன், லாஸ்ட்-மைல் டெலிவரிக்கான இவி பயன்பாட்டை எளிதானதாகவும் வசதியானதாகவும் மாற்றுவதே இந்த முயற்சியின் நோக்கமாகும். இந்தியாவின் முன்னணி எலெக்ட்ரிக் மொபிலிட்டி-ஆஸ்-எ-சர்வீஸ் (மாஸ்) தளமான யூலு மற்றும் இந்தியாவின் வேகமாக வளர்ந்து வரும் பேட்டரி ஸ்வாப்பிங் நெட்வொர்க்கான யூமா எனர்ஜி ஆகியவற்றுடன் இன்ஸ்டாமார்ட் மேற்கொண்டுள்ள கூட்டணிகளின் ஒரு பகுதியாக இந்த முயற்சி செயல்படுத்தப்படுகிறது. குறைந்த விலையில் கிடைக்கக் கூடிய எலெக்ட்ரிக் இருசக்கர வாகனங்களுக்கான அணுகல் மற்றும் சார்ஜிங் காரணமாக ஏற்படும் நேர இழப்பு என இவி பயன்பாட்டில் உள்ள இரண்டு முக்கிய நடைமுறைத் தடைகளுக்குத் தீர்வு காண்பதில் இந்த முயற்சி கவனம் செலுத்துகிறது.




இந்த பேட்டரி ஸ்வாப்பிங் நிலையங்களில் முதலாவது, இந்த மாத தொடக்கத்தில் இன்ஸ்டாமார்ட் பிஓடி-ல் திறந்து வைக்கப்பட்டது. இன்ஸ்டாமார்ட் நிறுவனத்தின் விபி - டிரைவர் & டெலிவரி ஓஆர்ஜி அனந்த் சௌத்ரி மற்றும் யூமா எனர்ஜி நிறுவனத்தின் ஹெட் ஆஃப் ரெவன்யூ அன்ட் ஆப்பரேஷன்ஸ் தீபக் நான்வானி ஆகியோர் முன்னிலையில் இந்த நிலையம் திறக்கப்பட்டது. டெலிவரி பார்ட்னர்கள் பணியாற்றும் இடங்களுக்கு அருகிலேயே ஆற்றல் வசதியை கொண்டு வருவதற்கான மற்றொரு முக்கிய நடவடிக்கையாக இது அமைந்துள்ளது.

யூமா உடன் பேட்டரி ஸ்வாப்பிங் வசதியை டெலிவரி பார்ட்னர்களுக்கு அருகில் கொண்டு வருதல்

டெலிவரி பார்ட்னர்களுக்கு அருகில் பேட்டரி ஸ்வாப்பிங் உள்கட்டமைப்பை கொண்டு வருவதற்காக இன்ஸ்டாமார்ட், யூமா எனர்ஜி உடன் இணைந்து செயல்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, யூமா-வின் ஸ்வாப்பிங் நிலையங்களை அமைப்பதற்காக இன்ஸ்டாமார்ட் தனது பிஓடி (டார்க் ஸ்டோர்கள்) வளாகங்களில் இடவசதி வழங்குகிறது.

யூமா எனர்ஜி தற்போது 2,000-க்கும் மேற்பட்ட பேட்டரி ஸ்வாப்பிங் யூனிட்களை இயக்கி வருகிறது. ஒவ்வொரு பேட்டரி ஸ்வாப்பிற்கும் இரண்டு நிமிடங்களுக்கும் குறைவான நேரமே ஆகிறது. தினசரி சராசரியாக 90 கி.மீ. அல்லது அதற்கு மேல் பயணிக்கும் டெலிவரி பார்ட்னர் களுக்கு ஒரு நாளில் இரண்டு பேட்டரி ஸ்வாப்புகள் தேவைப் படலாம்.

பிஓடி-களுக்கு அருகில் ஸ்வாப்பிங் நிலையங்களை அமைப்பதன் மூலம் தினசரி 60 நிமிடங்கள் வரை பயணம் மற்றும் காத்திருப்பு நேரத்தை சேமிக்க முடியும்.

## தமிழ்நாட்டில் குறைந்த கார்பன் உமிழ்வு கொண்ட கனரக சரக்கு போக்குவரத்திற்காக, டால்மியா சிமெண்ட் நிறுவனம் ஸ்விட்ச்லேப் மற்றும் இஜஎம் ஆகியவற்றுடன் இணைந்து 24 மின்சார லாரிகளைச் செயல்பாட்டிற்குக் கொண்டுவந்துள்ளது.

திருச்சி 29, செப்டம்பர் 2026: இந்தியாவின் முன்னணி சிமெண்ட் உற்பத்தியாளர்களில் ஒன்றான டால்மியா சிமெண்ட் (பாரத்) லிமிடெட், ஸ்விட்ச் லேப்ஸ் ஆட்டோ மொபைல்ஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் எனர்ஜி இன் மோஷன் லிமிடெட் ஆகியவற்றுடன் இணைந்து, தமிழ்நாட்டில் உள்ள காரைக்கால் துறைமுகத்திலிருந்து டால்மியாபுரம் மற்றும் அரியலூரில் உள்ள அதன் உற்பத்தி ஆலைகளுக்கு மொத்த மூலப் பொருட்களைக் கொண்டு செல்வதற்காக 24 கனரக மின்சார டிரக்குகளைப் பயன்படுத்தவிருப்பதாக அறிவித்துள்ளது. இந்த மின்சார வாகனக் குழுவானது, பெட்கோக், ஸ்லாக் மற்றும் ஜிப்சம் ஆகியவற்றை ஏற்றிச் செல்லும். இதன் மூலம், இந்த வழித்தடத்தில் வழக்கமான டீசல் மூலம் இயங்கும் சரக்கு போக்குவரத்து முறைக்கு மாற்றாக இது அமையும்.



இந்தப் பயன்பாடு, தமிழ்நாட்டில் கனரக மின்சார சரக்கு வாகனங்களின் ஆரம்பகட்டப் பயன்பாட்டைக் குறிக்கிறது. இதன் மூலம், அதிகப் பயன்பாடு கொண்ட தொழில்துறை தளவாடச் செயல்பாட்டில் மின்மயமாக்கல் கொண்டுவரப்படுகிறது. ஒவ்வொரு டிரக்கும் மாதத்திற்கு சுமார் 12,000 கிலோமீட்டர் பயணிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம், இந்த வாகனக் குழுவின் மொத்த ஆண்டுப் பயன்பாடு கிட்டத்தட்ட 2.9 மில்லியன் கிலோமீட்டராக உயரும். இந்தக் கூட்டு முயற்சியின் ஒரு பகுதியாக, டால்மியா சிமென்ட் மற்றும் ஸ்விட்ச்லேப்ஸ் நிறுவனங்கள், மின்சார டிரக்குகளின் பயன்பாட்டை மேம்படுத்தவும், அவை சும்மா இருக்கும் நேரத்தைக் குறைக்கவும் வடிவமைக்கப்பட்ட, தனித் தனி டிராக்டர் மற்றும் டிரெய்லர் பதிவின் மூலம் இயங்கும் ஒரு புதுமையான டிரெய்லர்-மாற்று இயக்க மாதிரியை உருவாக்கியுள்ளன.

இந்த மாதிரியின் கீழ், ஒரு மின்சார டிராக்டர், சரக்குகளை ஏற்றும் மற்றும் இறக்கும் செயல்பாடுகளின் போது சும்மா நிற்பதற்குப் பதிலாக, டிரெய்லர்களை மாற்றிக் கொள்ள முடியும். இது வாகனப் பயன்பாட்டை மேம்படுத்தவும், காத்திருப்பு நேரத்தைக் குறைக்கவும், தினசரி உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், மற்றும் வாகனக் குழுவின் சுழற்சி வேகத்தை மேம்படுத்தவும் உதவும். இதன் மூலம், அதிகப் பயன்பாடுள்ள மின்சார கனரக சரக்குப் போக்குவரத்தை வணிக ரீதியாகச் சாத்தியமாக்க முடியும்.

## ஆசிய விளையாட்டு போட்டியில் வெண்கலம் வென்ற வித்யா ராம்ராஜ்க்கு ரூ.30 லட்சம் ஊக்கத்தொகை: முதல்வர் விஜய்

சென்னை 29, செப்டம்பர் 2026: ஆசிய விளையாட்டு போட்டியில் வெண்கலம் வென்ற வித்யா ராம்ராஜ்க்கு ரூ.30 லட்சம் வழங்கப்படும் என முதலமைச்சர் விஜய் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்; ஜப்பானில் நடைபெற்றுவரும் ஆசிய விளையாட்டுப் போட்டியில், பெண்கள் 400 மீட்டர் தடை ஓட்டப் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்று தமிழ்நாட்டிற்கும், இந்தியாவிற்கும் பெருமை சேர்த்துள்ள தடகள வீராங்கனை வித்யா ராம்ராஜ் அவர்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுகளையும், நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.




இந்தியாவின் புகழ்பெற்ற தடகள வீராங்கனை திருமதி பி.டி. உஷா அவர்கள் 1984-ஆம் ஆண்டு படைத்த தேசிய சாதனையை 42 ஆண்டுகளுக்குப் பின்னர் வீராங்கனை வித்யா ராம்ராஜ் முறியடித்து, தற்போது புதிய தேசிய சாதனையைப் படைத்திருப்பது மேலும் சிறப்புக்குரியதாகும். அவரது சிறப்பான சாதனையைப் பாராட்டும் வகையில், தமிழ்நாடு அரசு சார்பில் ரூ.30 இலட்சம் உயரிய ஊக்கத்தொகை வழங்கப்படும். அவரது வெற்றி, தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கும், மகளிருக்கும் புதிய உத்வேகத்தையும், நம்பிக்கையையும் அளிக்கும்.

தடகள வீராங்கனை வித்யா ராம்ராஜ் தொடர்ந்து பல சாதனைகளைப் படைத்திட வாழ்த்துகிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

## 2027 நிதியாண்டின் முதல் காலாண்டில் 99.31% ஆயுள் காப்பீட்டு உரிமை கோரல் தீர்வு விகிதத்துடன் முன்னிலை வகிக்கும் ஐசிஐசிஐ புருடென்ஷியல் லைஃப் நிறுவனம்

சென்னை 29, செப்டம்பர் 2026: ஐசிஐசிஐ புருடென்ஷியல் லைஃப் இன்சூரன்ஸ் நிறுவனம் 2027 நிதியாண்டின் முதல் காலாண்டில் 99.31% ஆயுள் காப்பீட்டு உரிமை கோரல் தீர்வு விகிதத்தைப் (க்ளைம் செட்டில்மெண்ட் ரேஷியோ) பதிவு செய்துள்ளது. பொது வெளிப்படைத்தன்மைத் தரவுகளின்படி (படிவம் எல்-39 மற்றும் எல்-40), இந்தியாவின் முன்னனி ஆயுள் காப்பீட்டு நிறுவனங்களில் இதுவே மிக அதிகபட்ச விகிதமாகும். இக்காலாண்டில், இந்நிறுவனம் ரூ.414.08 கோடி மதிப்பிலான தனிநபர் இறப்புக் கோரல்களைத் தீர்த்து வைத்துள்ளது. குறிப்பாக, 2027 நிதியாண்டின் முதல் காலாண்டில் முன்னனி ஆயுள் காப்பீட்டு நிறுவனங்களிலேயே இந்நிறுவனத்தின் சராசரி உரிமை கோரல் மதிப்பு ~ரூ.15 லட்சமாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

ஐசிஐசிஐ புருடென்ஷியல் லைஃப் இன்சூரன்ஸ் நிறுவனத்தின் அண்டர்ரைட்டிங் மற்றும் ரீடெய்ல் கிளெய்ம்ஸ் தலைவர் திரு. சாரங் கோகலே கூறுகையில்: " ஐசிஐசிஐ புருடென்ஷியல் லைஃப் நிறுவனத்தில், எங்கள் வாடிக்கையாளர்களுக்கும் அவர்தம் குடும்பங்களுக்கும் காப்பீட்டு உரிமை கோரல் (க்ளைம்ஸ்) நடைமுறையை எளிதானதாகவும், தடையற்றதாகவும், சரியான நேரத்தில் கிடைக்கக்கூடியதாகவும் மாற்றுவதில் நாங்கள் உறுதியுடன் உள்ளோம். 2027 நிதியாண்டின் முதல் காலாண்டில், எங்கள் காப்பீட்டு உரிமை கோரல் தீர்வு விகிதம் (க்ளைம் செட்டில்மெண்ட் ரேஷியோ) துறைசார்ந்த அளவீடுகளில் மிக அதிகபட்சமாக 99.31%-ஆக இருந்தது. மேலும், கூடுதல் விசாரணை தேவையில்லாதக் கோரல்களுக்கான சராசரி தீர்வு நேரம் (டர்ன்அரௌண்ட் டைம்), இறுதி ஆவணம் பெறப்பட்ட தேதியிலிருந்து வெறும் 1 நாளாக மட்டுமே இருந்தது. இதுதவிர, இறப்பு உரிமைகோரல்களாக ரூ. 414.08 கோடியை நாங்கள் வழங்கியுள்ளோம்.

எங்களின் 'வாடிக்கையாளருக்கே முதன்மை முன்னுரிமை' என்ற அணுகுமுறையும், டிஜிட்டல் மயமாக்கலில் உள்ள வலுவான கவனமும், உரிமை கோரல்களை விரைவாகத் தீர்க்கவும், குடும்பங்களுக்கு மிகவும் தேவைப்படும் காலத்தில் உரிய நிதி நிவாரணத்தை வழங்கவும் எங்களுக்குத் துணைபுரிகின்றன. வாடிக்கையாளர்கள் எங்கள் மொபைல் செயலி, வாட்ஸ்அப், சாட்பாட் மற்றும் இணையதளம் வாயிலாக எளிதாக உரிமைகோரல்களைப் பதிவு செய்யவும் மற்றும் அவற்றின் நிலையைக் கண்காணிக்கவும் முடியும்.

எங்களின் 'கிளெய்ம் ஃபார் ஷுவர்' திட்டத்தின் கீழ், தகுதியான உரிமைகோரல்களுக்கு ஒரே நாளில் ~ரூ.75 கோடியை வழங்கியுள்ளோம். குடும்பங்களுக்கு மிகவும் தேவைப்படும் தருணத்தில் உரிய ஆதரவு கிடைப்பதை உறுதி செய்ய, எங்களின் டிஜிட்டல் நடைமுறைகளைத் தொடர்ந்து வலுப்படுத்தி வருகிறோம்." என்றார்.

## அசோக் சிங்கால்-ன் ஆன்மீக, சமூக ஒற்றுமைக்கான அர்ப்பணிப்பை சுட்டிக்காட்டிய பிரதமர் அவருக்கு மரியாதைச் செலுத்தினார்

சென்னை 29, செப்டம்பர் 2026: மறைந்த அசோக் சிங்கால்-க்கு பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று மரியாதைச் செலுத்தினார். அவரது, உறுதியான நம்பிக்கை, எளிமை, சமூக ஒற்றுமைக்கான உறுதியான அர்ப்பணிப்பு போன்ற பண்புகளை பிரதமர் சுட்டிக்காட்டினார்.

அமைப்பு ரீதியான அவரது அயராதப் பணிகளை நினைவுகூர்ந்த பிரதமர் அவரது வாழ்க்கை, எண்ணங்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் எழுதப்பட்டுள்ள கட்டுரை ஒன்றையும் பகிர்ந்துள்ளார்

இது குறித்து சமூக ஊடக எக்ஸ் தளத்தில் பிரதமர் தொடர்ச்சியாக வெளியிட்டுள்ள பதிவுகளில் கூறியிருப்பதாவது:

அசோக் சிங்கால் வலிமைமிக்கவர்ஞ் உறுதியான நம்பிக்கை, எளிமையான வாழ்க்கை முறையைக் கடைபிடித்தவர்.

அவரது ஆன்மீக உறுதிப்பாட்டை அயராத அமைப்புப் பணிகளுடன், சமூக ஒற்றுமைக்கான அசைக்க முடியாத ஈடுபாட்டுடனும் இணைத்திருந்தார்.

அவருக்கு அஞ்சலி செலுத்தி ஒரு கட்டுரையை எழுதியுள்ளேன்.

## தென்னிந்திய தொலைக்காட்சி மற்றும் ஓடிடி தயாரிப்பாளர்கள் சங்கத்தை தமிழ்நாடு தொலைக்காட்சி தயாரிப்பாளர் சங்கத்தின் தலைவர் ராதிகா சரத்குமார் தொடங்கி வைத்தார்



சென்னை 29, செப்டம்பர் 2026: தொலைக்காட்சி மற்றும் டிஜிட்டல் பொழுதுபோக்குத் துறையில் முக்கியமான முன்னெடுப்பாக, தமிழ், தெலுங்கு, மலையாளம் மற்றும் கன்னடத் துறைகளைச் சேர்ந்த முக்கிய தயாரிப்பாளர் அமைப்புகள் ஒன்றிணைந்து தென்னிந்திய தொலைக்காட்சி மற்றும் ஓடிடி தயாரிப்பாளர்கள் சங்கம் என்ற ஒருங்கிணைந்த அமைப்பை உருவாக்கியுள்ளன.

தமிழ், தெலுங்கு, மலையாளம் மற்றும் கன்னடம் ஆகிய நான்கு முக்கிய தென்னிந்திய மொழிகளின் தொலைக்காட்சி மற்றும் டிஜிட்டல் துறைகளில் செயல்பட்டு வந்த அமைப்புகள் தற்போது ஒரே குடையின் கீழ் இணைந்துள்ளன. இதன் மூலம், தென்னிந்திய தயாரிப்பாளர்களின் நலன்களுக்கான ஒற்றுமை மிக்க மற்றும் வலிமை வாய்ந்த அமைப்பு உருவாகியுள்ளது.

தொலைக்காட்சி துறையில் நீண்டகாலமாக நிலவி வரும் பல்வேறு பிரச்சினைகளுக்கு ஒருங்கிணைந்த தீர்வு காண்பது, கலைஞர்களின் கால்ஷீட் மற்றும் பணிநேரங்களை முறைப்படுத்துவது, தயாரிப்பாளர்களின் முதலீடுகளைப் பாதுகாப்பது மற்றும் தென்னிந்திய தொலைக்காட்சி மற்றும் டிஜிட்டல் துறைகளுக்கு இடையிலான ஒற்றுமையை மேலும் வலுப்படுத்துவது ஆகியவை இந்த புதிய சங்கத்தின் முக்கிய நோக்கங்களாகும்.


இதன் மூலம் நடிகர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள் மற்றும் தயாரிப்பு நிறுவனங்களுக்கு இடையே ஒரு வலுவான பாலமாக இந்த அமைப்பு செயல்பட்டு, மாநில எல்லைகளைக் கடந்து நடைபெறும் தயாரிப்புப் பணிகள் சீரான முறையிலும், வெளிப்படைத் தன்மையுடனும், ஒழுங்குமுறையுடனும் நடைபெறுவதற்கு தேவையான ஆதரவை வழங்கும்.

இந்த புதிய கவுன்சிலின் நிர்வாகக் குழுவின் தலைவராக தெலுங்கு தொலைக்காட்சி துறையைச் சேர்ந்த பிரசாத் செயல்படுவார். துணைத் தலைவர்களாக தமிழகத்தைச் சேர்ந்த உதய சங்கர், கன்னட துறையைச் சேர்ந்த அரவிந்த் மற்றும் கேரளாவைச் சேர்ந்த ஜெயக்குமார் ஆகியோர் பொறுப்பேற்றுள்ளனர். ராஜவேலு பொதுச் செயலாளராக செயல்படுவார். தமிழக சங்கத்தின் கௌரவத் தலைவர் ராதிகா சரத்குமார் புதிய கூட்டமைப்பை தொடங்கி வைத்தார். சத்யஜோதி டி.ஜி. தியாகராஜன் மற்றொரு கௌரவத் தலைவர் ஆவார்.

நான்கு மொழி தொலைக்காட்சி மற்றும் டிஜிட்டல் துறைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் இந்த ஒருங்கிணைந்த அமைப்பு, தயாரிப்பாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதிலும், தயாரிப்பு தரத்தை மேலும் உயர்த்துவதிலும், தென்னிந்திய தொலைக்காட்சி மற்றும் ஓடிடி துறையின் நிலையான வளர்ச்சியை உறுதி செய்வதிலும் முக்கியப் பங்காற்றும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தென்னிந்தியாவின் நான்கு முக்கிய மொழித் தொலைக்காட்சி மற்றும் டிஜிட்டல் துறைகள் ஒரே அமைப்பின் கீழ் இணைந்திருப்பது, பிராந்திய பொழுதுபோக்குத் துறையின் ஒற்றுமை மற்றும் எதிர்கால வளர்ச்சிக்கான முக்கியமான முன்னெடுப்பாக அமைந்துள்ளது.

## நடிகர் ரன்பீர் கபூர் பிறந்தநாளில் ‘ராமாயணா’ படக்குழு வெளியிட்ட சிறப்பு பிடிஎஸ் காட்சிகள்!



சென்னை 29, செப்டம்பர் 2026: நடிகர் ரன்பீர் கபூர் பிறந்தநாளை முன்னிட்டு, ‘ராமாயணா’ படக்குழு ராமராக ரன்பீரின் சிறப்பு பிடிஎஸ் காட்சிகளை வெளியிட்டுள்ளது. இந்திய புராணங்களில் மிகவும் போற்றப்படும் கதாபாத்திரங்களில் ஒன்றான ராமர் கதாபாத்திரத்திற்காக அவர் மேற்கொண்ட தயாரிப்பையும், தன்னை அந்தக் கதாபாத்திரமாக மாற்றிக்கொண்ட விதத்தையும் பார்வையாளர்கள் நெருக்கமாகக் காணும் வாய்ப்பை இந்த பிடிஎஸ் வழங்குகிறது.

இந்த பிடிஎஸ் வீடியோவில், ‘ராமாயணா’ போன்ற திரைப்படத்திற்கு சரியான நடிகரைத் தேர்வு செய்வது எவ்வளவு முக்கியம் என்பதை இயக்குநர் நிதேஷ் திவாரி பேசுகிறார். இந்த இதிகாசத்தின் மீது கோடிக்கணக்கான மக்களுக்கு ஆழமான நம்பிக்கையும் உணர்வுப்பூர்வமான தொடர்பும் இருப்பதால், கதாபாத்திரத்திற்கான நடிகரைத் தேர்ந்தெடுப்பதில் மிகுந்த கவனம் தேவைப்படுவதாக அவர் குறிப்பிடுகிறார். ராமர் கதாபாத்திரத்தில் நடிக்கும் ரன்பீர், ராமருக்கு உரிய மரியாதையுடன், தான் கூற்றிருக்கும் இந்தப் பொறுப்பைச் சிறப்பாக நிறைவேற்ற வேண்டும் என்ற உணர்வுடன் நடித்ததாகவும் அவர் பகிர்ந்து கொள்கிறார்.

இந்த பிடிஎஸ் காட்சியில், தசரதராக நடிக்கும் அருண் கோவில், சீதையாக நடிக்கும் சாய் பல்லவி மற்றும் லட்சுமணராக நடிக்கும் ரவி துபே ஆகியோரும் இடம் பெறுகின்றனர். ரன்பீர் கபூர் ராமர் கதாபாத்திரத்திற்கு எப்படி தயாரானார், அவர் எவ்வளவு பொருத்தமானவர் என அவர்கள் பேசுகின்றனர். நடிகர்களின் தோற்ற மாற்றங்கள் முதல் முக்கியமான காட்சிகளின் படப்பிடிப்பு வரை, திரைப்படத்திற்காக மேற்கொள்ளப்பட்ட நுணுக்கமான தயாரிப்புகளையும் இந்த பிடிஎஸ் காட்சி காட்டுகிறது. இதன் மூலம், இந்த பிரம்மாண்ட இதிகாசத் திரைப்படம் எவ்வாறு உருவாகியது என்பதையும் இதில் ரசிகர்கள் பார்க்கலாம்.

நிதேஷ் திவாரி இயக்கும் இப்படத்தை நமித் மல்ஹோத்ராவின் பிரைம் போகஸ் ஸ்டுடியோஸ் நிறுவனம், 8 முறை ஆஸ்கர் விருது பெற்ற டிஎன்இஜி மற்றும் யஷின் மான்ஸ்டர் மைண்ட் கிரியேஷன்ஸ் நிறுவனத்துடன் இணைந்து தயாரிக்கிறது. ‘ராமாயணா’ இரண்டு பாகங்களாக வெளியாகிறது. இந்தியாவைத் தவிர உலகளவில் இப்படத்தை சோனி பிக்சர்ஸ் விநியோகிக்கிறது. இந்தி பேசும் சந்தைக்கான விநியோகப் பணிகளை தர்மா புரொடக்சன்ஸ் மேற்கொள்கிறது. இப்படம் உலகளவில் ஐமேக்ஸ் வடிவில் வெளியாகிறது. முதல் பாகம் 2026 தீபாவளியிலும், இரண்டாம் பாகம் 2027 தீபாவளியிலும் வெளியாகும்.

இந்தியா முழுவதும் இந்தி, தமிழ், தெலுங்கு, கன்னடம் மற்றும் மலையாளம் ஆகிய மொழிகளில் இப்படம் வெளியாகும்.

## ராவணனாக மிரட்டும் ராக்கிங் ஸ்டார் யஷ்! ராமாயணம் முதல் அதிகாரப்பூர்வ போஸ்டர் வெளியானது



சென்னை 29, செப்டம்பர் 2026: இந்திய சினிமா ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்து வரும் ராமாயணம் திரைப்படத்தின் அடுத்த பிரம்மாண்ட அப்டேட் வெளியாகியுள்ளது. நிதேஷ் திவாரி இயக்கத்தில் உருவாகும் இப்படத்தில் ராவணனாக நடிக்கும் ராக்கிங் ஸ்டார் யஷின் முதல் அதிகாரப்பூர்வ போஸ்டரை படக்குழு வெளியிட்டுள்ளது.

தங்கக் கிரீடம், முத்து மாலைகள், பிரம்மாண்டமான தங்க ஆபரணங்கள் என ராஜ கம்பீரத்தில் காட்சியளிக்கும் யஷ், தனது தீவிரமான பார்வையால் போஸ்டரையே ஆக்கிரமிக்கிறார்.

டிரெய்லர் வெளியானது முதலே யஷின் ராவணன் கதாபாத்திரம் ரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்திய நிலையில், இந்த புதிய போஸ்டர் அந்த எதிர்பார்ப்பை மேலும் பல மடங்கு உயர்த்தியுள்ளது.

வலிமை, அறிவு, அதிகாரம் மற்றும் கம்பீரம் என ராவணனின் பல்வேறு பரிமாணங்களையும் பிரதிபலிக்கும் வகையில் யஷின் கதாபாத்திரம் வடிவமைக்கப்பட்டுள்ளது. வெளியாகியுள்ள இந்த போஸ்டர், ராமாயணம் திரைப்படம் உருவாகி வரும் பிரம்மாண்டத்தின் ஒரு சிறு முன்னோட்டமாகவே பார்க்கப்படுகிறது.

ரன்பீர் கபூர் ஸ்ரீ ராமராகவும், சாய் பல்லவி சீதையாகவும், யஷ் ராவணனாகவும், சன்னி தியோல் அனுமனாகவும் நடிக்கும் இந்தப் பிரம்மாண்ட காவியம், தீபாவளி 2026-ல் பாகம் 1 ஆகவும், தீபாவளி 2027-ல் பாகம் 2 ஆகவும் வெளியாகிறது.

## ட்ரூகாலர் ‘ஸ்கேம் செக்கர்’ தொழில்நுட்பம், மோசடி அழைப்பை கண்டறிதல் மற்றும் சமூகநுண்ணறிவை ஒருங்கிணைக்கிறது




சென்னை 29, செப்டம்பர் 2026: தங்களுக்கு வருவது ஒரு ஒரு மோசடி அழைப்பா என்பதை அதிவிரைவாக அந்த கணத்திலேயே உறுதி செய்யவும், சமீபத்திய மோசடி நடவடிக்கைகளின் போக்குகள் குறித்த தகவல்களை தெரிந்து வைத்துக் கொள்ளவும் உதவும் வகையில் வடிவமைக்கப்பட்ட ஒரு

புதிய ‘ட்ரூகாலர் ஸ்கேம் செக்கர்’-தொழில்நுட்பத்தை , இணையம் மற்றும் செயலியில் ட்ரூகாலர் இன்று அறிமுகப்படுத்தியுள்ளது. அழைப்பாளரை அடையாளம் காணுதல் மற்றும் ஸ்பேம் தடுப்பு பாதுகாப்பு அம்சங்களுக்கும் அப்பால் கூடுதலாக ட்ரூகாலரின் மோசடி அழைப்புப் பாதுகாப்பு வளையத்தை மேலும் விரிவுபடுத்துவதே இதன் நோக்கமாகும்.

இந்த புதிய தீர்வு , பல்வேறு மோசடி கண்டறிதலுக்கான செயல்திறன்களை ஒன்றிணைத்து, ஏதாவது சந்தேகத்திற்குரிய இணைய இணைப்புகளைச் சரிபார்க்கவும், தொலைபேசி எண்களைத் தேடி அடையாளம் காணவும், மோசடி அழைப்பு தொடர்புடைய பொருத்தமான அறிக்கைகளை காணவும், எந்த ஒரு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் முன்பாக சாத்தியக்கூறுள்ள மோசடி முயற்சிகள் பற்றி நன்கு புரிந்துகொள்ளவும் அனுமதிக்கிறது.

ட்ரூகாலர் ஸ்கேம் செக்கர் மூலம், மக்கள் பின்வருபவற்றை சரிபார்க்கலாம் ஒரு இணைப்பை சரிபார்த்தல் (லிங்) அத்தகைய ஒரு இணைப்பு தீய எண்ணத்துடனானதா அல்லது ஃபிஷிங் முயற்சிக்குப் பயன்படுத்தப்படுவதா என்பதற்கான அறிகுறிகளைச் சரிபார்த்துக்கொள்ளும் வசதி. ஒரு தொலைபேசி எண்ணை அடையாளம் காண: ட்ரூகாலரின் கண்காணிப்பு அமைப்புகள் மற்றும் சமூக சமிக்கைகள் எதை அடையாளப்படுத்துகிறது என்பதை காண. மோசடி பதிவு அறிக்கைகளை கண்டறிதல் இதே போன்ற மோசடி அழைப்புக்கள் குறித்து மற்றவர்கள் தெரிவித்த கருத்துக்களை காண. தங்களது கவலை குறித்து பயனர்கள் தானாகவே விவரங்களை பதிவு செய்தல் மற்றும் இணைப்புகள் அல்லது எண்கள் குறித்த கேள்விகள் மற்றும் அது தொடர்புடைய சமூக அறிக்கைகள் உட்பட உரிய பொருத்தமான முடிவுகளைப் பெறலாம்.

இவை ஒன்றிணைந்து, சந்தேகத்திற்குரிய எந்த ஒரு செய்தியிலும் பொதுவாக இடம் பெறக்கூடிய மூன்று விஷயங்களை வெளிப்படுத்துகின்றன : ஒரு எண், ஒரு இணைப்பு மற்றும் ஒரு கதை. ஒரு நபர் ஒரே இடத்தில் இந்த மூன்று செய்திகளையும், ஒரு சில நொடிகளில் சரிபார்க்க முடியும்.

மேலும், அடுத்த கட்டமாக ட்ரூ காலர் நிறுவனம், எதிர்காலத்தில் மிகவிரைவில், மோசடி நடைமுறை நுட்பங்கள் குறித்த விரிவான விவரங்கள், தீவிர பகுப்பாய்விற்கான ஸ்கிரீன்ஷாட் பதிவேற்றங்கள், பயனர் அங்கீகாரம் மற்றும் கூடுதல் செயல் திறன்கள் போன்ற தொழில்நுட்ப அம்சங்கள் அடங்கிய ஒன்றாக ட்ரூகாலர் ஸ்கேம் செக்கரை விரிவடையச் திட்டமிட்டுள்ளது.

“ஒரு அழைப்பின் போது மக்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஏதோ ஒன்று சரியில்லை என்பதை மனதளவில் ஆழமாக உணர்கிறார்கள், என்றாலும், அதற்கு எதிர்வினையாற்றுவதற்கு முன் அதைச் சரிபார்க்க அவர்களுக்கு ஒரு அதிவிரைவான வழிமுறை தேவைப்படுகிறது,” என்று ரிஷித் ஜுன்ஜுன்வாலா சிஇஓ, ட்ரூகாலர் கூறினார்.

